# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 09 வெள்ளிக்கிழமை 21.02.2025 கதிர் 134







# புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி உரிய நேரம் வரும்போது பேசுவோம்

## - முன்னணிக்குத் தமிழரசு பதில் கடிதம் -



யாழ்ப்பாணம், பெப். 21

புதிய அரசமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த அழைப்புக்கு உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி பதிலளித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந் திரன் ஆகியோர் அண்மையில் நேரில் சென்று சந்தித்துக் கூட்டாகச் செயற்படுவதற்கான அழைப்புக் கடிதத்தை வழங்கியிருந்தனர்.

2 ➤

## வவுனியாவில் டிப்பர் மோதி பெண்ணொருவர் படுகாயம்



வவுனியா, பெப். 21

வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

2 ➤

## எல்லை தாண்டும் இந்திய இழுவைப் படகுகள்: தடுத்து நிறுத்துமாறு யாழில் 27 இல் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 21

இந்திய மீன்பிடியாளர்களின் சட்டவிரோத இழுவைப் படகு தொழில் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு கோரி எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். நகரில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தீவக கடற்றொழில் அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில்

2 ➤




## மித்தெனிய துப்பாக்கிச்சூடு: மூன்று சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 21

காலி, மித்தெனிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

2 ➤

# வடக்குக்கு ஒதுக்கும் நிதி வன்னிக்கும் வர வேண்டும்

## சபையில் செல்வம் எம்.பி. வலியுறுத்து


கொழும்பு, பெப். 21

வரவு - செலவுத் திட்டத்தில் வடக்குக்கு ஒதுக்கப்படும் நிதி, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் வன்னிக்கும் வரவேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற

2 ➤

## கம்பஹாவில் இளைஞர் ஒருவர் நேற்று இரவு சுட்டுப் படுகொலை



கம்பஹா, பெப். 21

கம்பஹா மாவட்டம், ஜா - எல, உஸ்வெட்டகெய்யாவ, மோகன்வத்த கடற்கரையில் ரி - 56 ரக துப்பாக்கியால் இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

இனந்தெரியாத ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

கடவத்தை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

கொலைக்கான காரணம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அர்ச்சுனாவின் நடத்தை பற்றிய அறிக்கை நாடாளுமன்றத்துக்கு



கொழும்பு, பெப். 21

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் நடத்தை

2 ➤

## யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி

# பழைய மாணவர் சங்கம் நடத்தும் ஒன்றுகூடல் நாளை கொழும்பில்

கொழும்பு, பெப். 21

நாளை சனிக்கிழமை, தமது தாய்ச் சங்கத்துடன் ஒன்றுகூடிக் கொண்டாடுகின்ற ஒரு முழுநாள் நிகழ்ச்சியை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் தென் இலங்கைப் பழைய மாணவர் சங்கத்தினர் கொழும்பில் நடத்துகின்றனர்.

மைதான நிகழ்வுகள் தெஹிவளை, Frazer மைதானத்தில் காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரையிலும் 'ஒன்றுகூடல் இரவு' தெஹிவளை, கடற்சாலையில் உள்ள 'Party Party' Beach Restaurant இல் மாலை 7 மணி முதல் இரவு 12 மணி வரையிலும் இடம்பெறவுள்ளன.

இலங்கையின் மிக முக்கியமான கல்வி நிறுவனம் ஒன்றின் செழிப்பான பாரம்பரியத்தையும் நிலைத்திருக்கும் மரபையும் கொண்டாடும் எதிர்பார்ப்புடன் ஒன்றுகூடல் நடாத்தப்படவுள்ளது.

பழைய மாணவர்கள் சங்கங்கள், பரியோவான் கல்லூரியின் மதிப்பையும் மரபுகளையும் தக்கவைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. 119 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட தென் இலங்கைச் சங்கம் பழைய மாணவர்களிடையே தொடர்புகளை வளர்ப்பதிலும், பள்ளியின் மேம்பாட்டு முயற்சிகளை ஆதரிப்பதிலும் வாழ்நாள் முழுவதும் கல்லூரி மீதான ஈடுபாட்டுக்கான ஒரு தளத்தை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றன.

ஒன்றுகூடலானது பழைய மாணவர்கள் மீண்டும் இணைந்து, ஒத்துழைத்து, பள்ளியின் முன்னேற்றத் திற்குத் தொடர்ந்துபங்களிக்க ஒரு தளத்தை வழங்குகின்றது.

இந்த முக்கிய நிகழ்வில் பங்கேற்கவும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் மரபை கொண்டாடவும் அனைத்து பழைய மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் அழைத்திருக்கின்ற பழைய மாணவர் சங்கம், இந்த நிகழ்வு பற்றிய மேலதிக தகவல்களுக்கு +94777738017 / +94777812488 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டிருக்கின்றது.

கடந்த காலத்தைக் கௌரவித்து, எதிர்காலத்தைக்கட்டியெழுப்புவதற்காக, அனைவரும் ஒன்றிணைகின்ற இந்த நிகழ்வை, மகிழ்ச்சியூட்டுகின்ற, மறக்க முடியாத ஒன்றுகூடலாக, கல்லூரிப் பழைய மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## புதிய அரசமைப்பு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இந்த அழைப்புக்கான பதில் கடிதத்தைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம், முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"புதிய அரசமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் கலந்துரையாட விடுக்கப் பட்ட அழைப்புக் கடிதம் தொடர்பில் எமது மத்திய செயற் குழுவின் 16.02.2025 ஆம் திகதிய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.ஷபுதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதாலும் அதற்கான முன்வரைவு எதையும் சமர்ப்பிக்காத நிலையிலும், நாம் அரசமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாகக் காணப்படவில்லை என உணரப்பட்டது.

மேலும் எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து வலியுறுத்தி வரும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு இன்னும் வலு வுள்ளதாகவே பேணப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அரசு அதன் அரசமைப்பு உருவாக்க முன்மொழிவைத் துரிதமாக முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தி கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

## வவுனியாவில் டிப்பர் மோதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பிய டிப்பர் வாகனம் ஒன்று வீதியில் ஏற முற்பட்டபோது நகரில் இருந்து வேப்பங்குளம் 8 ஆம் ஒழுங்கையில் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மித்தெனிய துப்பாக்கிச்சூடு: .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் இன்று நாடாளுமன்றத்தில் உரையாறும் போது இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

மித்தெனிய சந்தியில் தனது பிள்ளைகள் இருவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபர் ஒருவரை இலக்கு வைத்து இனந்தெரியாத குழுவினரால் கடந்த 18ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் தந்தை மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரின் மகள் மற்றும் மகன் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூன்று பேர் இன்று காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## எல்லை தாண்டும் இந்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்திருந்த குறித்த அமைப்பினர் மேலும் கூறுகையில்,

"இந்திய மீனவரின் சட்டவிரோத இழுவைமடித் தொழில் நடவடிக்கையானது வடக்கில் குறிப்பாக எமது தீவக பிரதேசத்தைக் கடுமையாகப் பாதித்து வருகின்றது.

இதை நிறுத்துமாறு நாம் பல போராட்டங்கள், கோரிக்கைகளை முன்வைத்தாலும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில்,எமது வாழ்வுரிமைக்கான பொருளாதார ஈட்டலை உறுதி செய்ய நாம் வீதியில் இறங்கி போராடத் தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் தீவகக் கடற்றொழில் அமைப்புக்களான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

அதனடிப்படையில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும் எமது இந்தப் போராட்டம் யாழ். பண்ணையில் உள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பித்து ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாகச் செல்லவுள்ளது.

அத்துடன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் வழங்கவுள்ளோம்.

எமது இந்தப் போராட்டத்துக்கு யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பு வழங்கி போராட்டத்தை வலுவூட்டுமாறு அழைப்பு விடுகின்றோம்.

குறித்த போராட்டத்தில் தங்கள் பங்களிப்பை வழங்க 077 199 4097 அல்லது 077 563 4883 என்றை இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கோருகின்றோம்." - என்றனர்.

## வடக்குக்கு ஒதுக்கும் நிதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"வெளிநாட்டுத் தூதுவர்களாக இருக்கலாம், அமைச்சர்களாக இருக்கலாம், ஜனாதிபதியாக இருக்கலாம். வடக்குக்கென வரும்போது யாழ்ப்பாணத்தில்தான் முகாமிடுகின்றனர்.

வடக்கு என்பது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியது. எனினும், வன்னிக்குப் பெரிதாக எவரும் வருவதில்லை. தேர்தல் காலங்களில் வரும் சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே, வன்னி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாதீட்டில் வடக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாரிய அளவான நிதி வன்னிக்கு வருமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நிதி ஒதுக்க வேண்டாம் எனக் கூறவில்லை. ஒதுக்கப்படும் நிதி ஏனைய மாவட்டங்களுக்கும் வர வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி வன்னிக்கும் வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்." - என்றார்.

## அர்ச்சுனாவின் நடத்தை பற்றிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காகத் தன்னால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கையைச் சபையில் முன்வைப்ப தாக சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன இன்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

குழுக்களின் பிரதித் தவிசாளரான ஹேமாலி வீரசேகர தலைமையில் விஜித ஹேரத் மற்றும் ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த அறிக்கையானது, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களினால் அவர்களது பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள் பற்றியும் சபாநாயர் அறிவித்தல் மேற்கொண்டார்.

அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்களினால் அவர்களது பாதுகாப்பு தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அடிக்கடி தனக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து பரிசீலனை செய்ததன் பின்னர், அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காகப் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அந்தக் கோரிக்கைகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com





# உணவும் பாலின சமத்துவமும்

பலம் என்பது பாலினத்தால் வருவதல்ல. ஊட்டச்சத்து உணவாலும், பழக்கத்தாலும், உளவியலாலும் வருவதாகும். ஆரோக்கிய உணவுகளை சமைக்கத் தெரிந்த பெண்களுக்கு தங்கள் ஆரோக்கியம் குறித்து சிந்திக்கவும் தெரிய வேண்டும். சமைப்பது என்பது பெண்களுக்கே உரிய கடமையல்ல. ஆண் சமைத் தாலும் பருப்பு வேகும் என்பதை குடும்பங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் இணைந்து சமைத்துண்பதை சமூகம் பழகிக் கொள்ள வேண்டும்.

உலக அளவில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஆண்களைவிட பெண்களே அதிக அளவு பாதிப்புகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் உள்ளாகின்றனர். வளர்ந்து வரும் நாடுகளில் அதிக எண்ணிக்கையிலான ஊட்டச்சத்து குறைபாடுடையவர்களாக பதின்ம வயதுப் பெண்களே உள்ளனர்.

நமது ஊரின் பண்பாடு சமைப்பதை பெண்களின் கடமையாகக் கட்டமைத்து வைத்துள்ளது. ஆண்கள் அதிக அளவு ஊட்டச்சத்து உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று குடும்ப அமைப்பு 75% அதிகமான ஊட்டச்சத்து உணவுகளை ஆண்களின் தட்டுகளில் வைத்துவிட்டு, மிச்சத்தையும் சொச்சத்தையும் பெண்களின் தட்டில் போனால் போகட்டும் என்று வைக்கின்றது.

மாதாவிடாய்வழி உதிரத்தை சுத்திகரிக்கவும், கருத்தரித்து பத்து மாதம் இன்னொரு உயிரை உடலுக்குள் வளர்த்தெடுக்கவும், சிசுவைப் புறந்தள்ளவும், புறந்தள்ளிய பின் தாய்ப்பாலூட்டவும் பெண்களுக்கு ஆற்றல் இழப்பீடுகள் அதிகமாக ஏற்படுகின்றன. அதை சமன் செய்ய பெண்ணுடலுக்கு ஊட்டச்சத்து நிறை உணவுகள் அதிகம் தேவைப்படுகின்றது.

இதை இம்மியளவும் புரிந்துகொள்ளாத குடும்பங்கள் பேறுகாலத்தின் போது ஏற்படும் இறப்புகளை பற்றியோ, இளம் வயதில் மெனோபாஸ் நிலை அடையும் பெண்களைப் பற்றியோ வாய்திறப்பதில்லை. இதற்கெல்லாம் வாய்திறந்துவிட்டால், பெண்களுக்கு சம உணவு பகிரப்பட்டால், பெண் உடல் பலம் பெற்றுவிட்டால், “ஆண்தான் பலமானவன், ஆண் என்றால் அப்படிதான் செய்வான், பெண் என்றால் அடங்கி ஒடி ஒளிய வேண்டும்.”, என்று காட்டிய பூச்சாண்டி வேலைகளெல்லாம் தரைமட்டமாகிவிடும் என்ற அச்சம் சமூகத்துக்கு உண்டு. அதனால் மௌனம் சாதித்து பெண் நலத்தை திசைதிருப்பி, “பெண்கள் சிகரெட் குடிக்கிறார்கள், சரக்கடிக்கிறார்கள், குய்யோ முய்யோ”, என்று அடிக்கடி கதறிக் கொள்கின்றது.

இதில் முரண் என்னவென்றால் பேருந்து நிலையங்கள் போன்ற பொது இடங்களில் பெரும்பாலான ஆண்கள் புகைபிடித்துக்கொண்டு புகையை எதிர் இருப்பவர் முகத்திற்கு அருகிலேயே விடுவார்கள், இவர்களால் அந்தப் புகையை சுவாசிக்க நேரிடும் புகைப்பழக்கமே இல்லாத பெண்களும்கூட புற்று நோய் உள்ளிட்ட பாதிப்புக்கு உள்ளாகின்றனர். நீண்ட காலமாக வீட்டுக்குள்ளே புகைபிடிக்கும் ஆண்களால் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என குடும்ப உறுப்பினர்கள் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதையெல்லாம் குடும்பங்கள் ஒரு போதும் கண்டு கொள்ளாது. தவறானதாகவே இருந்தாலும் அறமற்ற குற்றமாகவே இருந்தாலும் அதை ஆண்கள் செய்தால் தவறில்லை என்பது குடும்ப தர்மமாக நிலவுகின்றது.

குடும்பக் கடமையாக இருக்கின்ற பொழுது சமைப்பது பெண்களுக்கானதாகவும், வியாபாரமாக வருகின்ற பொழுதும், ஊதியம் பெறுகின்ற பொழுதும், சமையல் தொழில் ஆண்களுக்கானதாகவும் மாறிவிடுகின்றது. பெருமதிப்பிலான உணவுக்கடைகளை நிர்வகிப்பது, உணவு தயாரிப்பதில் மாஸ்டர்களாக இருப்பது, வல்லுனநர்களாக இருப்பது என்ற இலாப மட்டங்களில் ஆண்களே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

2000 ஆண்டுகளுக்கும் மேலாக சமைத்தே தேய்ந்துபோன பெண், இன்றும் கூலியில்லாமல் அதே



சமயலறையில் சிறகொடிந்து சமைத்துக் கொண்டுதான் இருக்கிறாள். இந்தியக்குடும்பங்களில் வீட்டு வேலை செய்யும் சொற்பக் கூலிகளாக நிறைய பெண்கள் உள்ளனர். ஊதியம், வணிகம் என்ற தளத்தில் சமைப்பதை கையிலெடுத்த ஆண்கள் வீட்டு வேலை, தினக்கூலிகளாக பெரும்பாலும் ஈடுபடுவதில்லை. அதை குடும்ப அமைப்புகளும் ஆதரிப்பதுமில்லை என்ற பின்னணியில் நிறைய உண்மைகள் மறைந்து கிடக்கின்றன.

பெரிய வீடுகளுக்கு வீட்டு வேலை தினக்கூலிகளாக, மாத ஊதியம் வாங்கும் பணியாள்களாக சமைக்கச் செல்லும் பெண்கள், வீட்டு முதலாளி ஆண்களால் பலவித துன்புறுத்தல்களுக்கு ஆளாவது வழக்கம். அதை நகைச்சுவையாக காட்சிப்படுத்துகின்ற கலை இலக்கியத் துறையும், சுரண்டலைக் கொண்ட அக்காட்சிகளை நகைச்சுவையெனக் கருதி சிரிக்கின்ற குடும்ப அமைப்பும், ஆண் சமையல்காரரை வீட்டுக்குள் அனுமதித்து, வீட்டுப் பெண்கள் அவர்களுடன் இயல்பாக பேசுவதைக்கூட ஏற்றுக்கொள்வதில்லை. ஆண்கள் கூத்தடித்தாலோ, பணிப்பெண்களை சுரண்டினாலோ, வன்முறைகளில் ஈடுபட்டாலோ குடும்ப அமைப்பு சிறிதும் சலனம் கொள்வதில்லை. ஆனால் பால் போட, பேப்பர் போட வரும் ஆண்களிடம்கூட இயல்பாக வீட்டுப் பெண்கள் பேசுவதை சந்தேகிக்கும்.

குடும்ப அமைப்புக்கு ஆண்கள் செய்யும் குற்றங்களெல்லாம் இயல்பானதாகத் தெரிகின்றது. “ஊசி இடம் கொடுக்காமல் நூல் நுழையுமா, பெண் இரவில் வெளியே சுத்தலாமா”, என்று பாதிக்கப்படும் பெண்களையே குறை சொல்லி, குற்றவாளியாக்கி, ஆண்களின் குற்றங்களை தொடர்ந்து ஆதரித்து வரும் ஆண்களுக்கான அமைப்பாக குடும்பம் மாறியுள்ளது.

குடும்பத்தாரின் தேவைகளுக்கு சமைத்துப் போடும் பெண்களுக்கு போதிய சத்தான உணவுகள் கிடைக்காமலிருப்பதால் ஏற்படும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை குறித்து யாரும் கவலை கொள்வதில்லை. ஊட்டச்சத்து பற்றாக்குறையால் உடல் உபாதைகளை சந்திக்கும் பெண்கள், தங்கள் உடல் மீது நம்பிக்கை இழந்து விடுகின்றனர். பெண் உடல் பலவீனமானது என்ற பொது உளவியலை உண்மையென உள்வாங்கிக் கொள்கின்றனர். சரிவிகித ஊட்டச்சத்து உணவை எடுத்துக்கொள்ளும் ஆண், தன்னை பெண்ணை விட பலமானவன் எனக் கருதுகிறான்.

சிலிண்டர் தூக்குவது, சுமைகளைத் தூக்குவது, கடினமான வேலைகளில் சுலபமாக ஈடுபடுவது என வீடுகளுக்குள் சிறு வயதிலிருந்தே பழகுகின்ற ஆண்கள் தங்களுடைய உடலை பலமானதாக்கிக் கொள்கின்றனர். சத்தான உணவெடுத்துக் கொள்வதில் பின்தங்கியுள்ள பெண்கள், கோலம் போடுவது, பூக் கட்டுவது, வீடு பெறுக்குவதென்று அதிக நேரம் எடுத்துக்கொள்ளுகின்ற பணிகளில் தங்களை பழக்கப்படுத்திக்கொண்டு உடலை பலவீனமானதாக்கிக் கொள்கின்றனர்.

பிறக்கின்ற பொழுது இங்கு எல்லாக் குழந்தைகளுமே ஒரே வலிமையுடன்தான் பிறக்கின்றனர். ஊட்டச்சத்து குறைபாடுடைய பெண்ணுக்கும், ஊட்டச்சத்துடைய பெண்ணுக்கும் பிறக்கின்ற குழந்தைகளுக்குள் கண்டிப்பாக வேறுபாடு இருக்கும். ஆனால் ஒத்த ஊட்டச்சத்து கொண்ட இரு வேறு பெண்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் ஆண் குழந்தையாயினும், பெண் குழந்தையாயினும், ஒரே பலத்துடனேயே பிறக்கும். அவர்கள் வளரும் பொழுது பாலின பாகுபாட்டு கலாசாரத்தோடு குடும்பங்கள் தருகின்ற ஊட்டச்சத்து நிறைந்த உணவின் அடிப்படையிலும், அதன் மூலம் அக்குழந்தைகள் அடைகின்ற உடல் பலம் சார்ந்த நம்பிக்கைஃஅவ நம்பிக்கை உளவியலாலும், உடல் பழக்கத்தினாலும், ஆணும் பெண்ணும் இரு வேறுபட்ட உடல்வாகை அடைகின்றனர்.

பலம் என்பது பாலினத்தால் வருவதல்ல. ஊட்டச்சத்து உணவாலும், பழக்கத்தாலும், உளவியலாலும் வருவதாகும். ஆரோக்கிய உணவுகளை சமைக்கத் தெரிந்த பெண்களுக்கு தங்கள் ஆரோக்கியம் குறித்து சிந்திக்கவும் தெரிய வேண்டும். சமைப்பது என்பது பெண்களுக்கே உரிய கடமையல்ல. ஆண் சமைத்தாலும் பருப்பு வேகும் என்பதை குடும்பங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் இணைந்து சமைத்துண்பதை சமூகம் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆணும் பெண்ணும் சரிசம ஊட்டச்சத்து உணவுகளைப் பகிர்ந்துகொள்வது என்பது அவசியமான ஒன்றாகும். பகிர்ந்து கொள்வதைத் தொடர்ந்து குடும்பங்களில் சரிசமமாக அமர்ந்து உணவு உட்கொள்வதை பண்பாடாக வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

# இஸ்ரேலில் தொடர் வெடிப்பு சிதறிய மூன்று பஸ்கள்!



இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் புறநகர்ப் பகுதிகளான பேட் யாம் மற்றும் ஹோலோனில் உள்ள வாகன நிறுத்துமிடங்களில் மூன்று காலி பஸ்கள் நேற்று இரவு அடுத்தடுத்து வெடித்துச் சிதறின.

சம்பவங்களில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

மேலும், இரண்டு பஸ்களிலிருந்து வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்புகள் தீவிரவாத தாக்குதலாக இருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

காசாவில் இருந்து நான்கு பணயக்கைதிகளின் உடல்களை ஹமாஸ் திருப்பியனுப்பியதையடுத்து இஸ்ரேல் ஏற்கனவே துக்கத்தில் இருந்த ஒரு நாளில் வெடிப்புகள் நடந்தன.

பஸ் வெடிப்புகள் 2000 களில் பாலஸ்தீனிய எழுச்சியின் போது குண்டுவெடிப்புகளை நினைவூட்டுவதாக அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், காட்சிகளை ஆராய்ந்து சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பொலிஸார் கூறியுள்ளனர்.

அதேநேரத்தில், வெடிகுண்டு சப்பர்கள் அருகில் சந்தேகத்திற்குரிய வேறு ஏதேனும் பொருட்களை தேடுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம், நிலைமை குறித்து தொடர்ந்து புதுப்பிப்புகளைப் பெற்று வருவதாகவும் வியாழன் இரவு பாதுகாப்பு மதிப்பீட்டை நடத்தியதாகவும் கூறியது.

இதையடுத்து, பயங்கரவாத மையங்களுக்கு எதிராக மேற்குக் கரையில் பாரிய நடவடிக்கையை மேற்கொள்ள இஸ்ரேலிய பாதுகாப்பு படைகளுக்கு அவர் பிரதமர் அறிவுறுத்தியதாக அறிவித்தது.

## 200 சீன மோசடி சந்தேக நபர்கள் மியன்மாரிலிருந்து நாடு திரும்பினர்!

மியன்மாரில் இருந்து மோசடி குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 200 சீன பிரஜைகளின் முதல் குழுவை திருப்பி அனுப்பும் பட்டய விமானம் தாய்லாந்து வழியாக கிழக்கு சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள நான்ஜிங்கில் நேற்று பிற்பகல் தரையிறங்கியது.

சீனாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சகத்தின்படி,

தொலைத்தொடர்பு-இணைய மோசடிகளைத் தடுக்க சீனா, தாய்லாந்து மற்றும் மியன்மார் இடையேயான பன்னாட்டு சட்ட அமலாக்க முயற்சிகளில் இது ஒரு மைல்கல் மற்றும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

தாய்லாந்து-மியன்மார் எல்லைப் பகுதியில் மோசடி குற்றங்களில் ஈடுபட்ட 800-க்கும் மேற்பட்ட சீன சந்தேக நபர்கள் அடுத்த மூன்று நாட்களுக்குள் வாடகை விமானங்களில் ஜியாங்சு மாகாணத்திற்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று சீனாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் தகவலை மேற்கொள்காட்டி குளோபல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.




அமைச்சகத்தின் கூற்றுப்படி, மூன்று நாடுகளின் சட்ட அமலாக்க அதிகாரிகள் சமீபத்தில் மியாவாடியில் தொலைத்தொடர்பு மோசடிக்கு எதிராக கூட்டு நடவடிக்கையை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

## அமெ. உள்நாட்டு வருவாய் சேவையில் 6,700 ஊழியர்கள் பணிநீக்கம்!




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் நேற்று உள்நாட்டு வருவாய் சேவையில் சுமார் 6,700 ஊழியர்களை பணிநீக்கம் செய்யத் தொடங்கியது.

வங்கி கட்டுப்பாட்டாளர்கள், வன ஊழியர்கள், ராக்கெட் விஞ்ஞானிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான பிற அரசாங்க ஊழியர்களை குறிவைத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பெருமளவிலான ஆட்குறைப்பு முயற்சியின் ஒரு பகுதியே இந்த பணிநீக்கம் ஆகும்.

ட்ரம்பின் மிகப்பெரிய பிரச்சார நன்கொடையாளரான தொழில்நுட்ப பில்லியனர் எலோன் மஸ்க் இந்த முயற்சியை வழிநடத்துகிறார்.

அமெரிக்காவின் உள்நாட்டு வருவாய் சேவையில் நாடு முழுவதும் சுமார் 100,000 கணக்காளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணிபுரிகின்றனர். முன்னாள் ஜனாதிபதி பைடன் நிர்வாகம் $80 பில்லியன் முதலீட்டில் அமலாக்கத்தை மேம்படுத்தி ஏஜென்சியை நவீனமயமாக்கும் பணியில் ஈடுபட்டது.

ஆனால், ஜனாதிபதி ட்ரம்ப் அதன் அதிகாரங்களை கட்டுப்படுத்த விரும்புகிறார்

உள்நாட்டு வருவாய் சேவை செய்தி தொடர்பாளர் பணிநீக்கங்களுக்கான சரியான எண்ணிக்கையை வழங்க மறுத்துவிட்டது.

எனினும், இந்த விடயத்தை நன்கு அறிந்தவர்களின் கூற்றுப்படி, பணிநீக்கங்கள் மொத்தம் 6,700 ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி பைடனின் கீழ் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக பணியமர்த்தப்பட்ட ஏஜென்சியில் பணிபுரியும் தொழிலாளர்களை இலக்காகக் கொண்டுள்ளது.

2021 இல் பைடன் பதவியேற்பதற்கு முன்பு இருந்த 80,000 பேருடன் ஒப்பிடும்போது, வரி ஏஜென்சி இப்போது தோராயமாக 100,000 பேரை கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

## எகிப்தில் 3,500 ஆண்டு பழமையான கல்லறை கண்டுபிடிப்பு

உலகின் பழமையான நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகமும் ஒன்று. அங்கு அகழ்வாராய்ச்சியின் போது அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் சான்றுகளும் அதனை உறுதி செய்கின்றன.

அந்தவகையில் நைல் நதி அருகே உள்ள தீப்ஸ் மலைப்பகுதியில் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. அங்கு பழமை வாய்ந்த கல்லறை ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை ஆராய்ச்சி செய்தபோது கி.மு.15-ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் துட்மோஸ் என்ற மன்னரின் கல்லறையாக இருக்கலாம் என தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



3 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்லறை கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

# ஒரு பிரதேசத்தை கைப்பற்ற அதன் ‘மொழி’யை அழிப்பதே சிறந்த வழி

## ஜெகதீப் தன்கர் தெரிவிப்பு

ஒரு பிரதேசத்தை கைப்பற்ற அதன் கலாச்சாரத்தை தகர்த்து அதன் மொழியை அழிப்பதே சிறந்த வழி என குடியரசு துணை தலைவர் ஜெகதீப் தன்கர் பேசியுள்ளார்.

சமீபத்தில் நடந்த 98ஆவது அகில பாரதிய மராத்தி சாகித்ய சம்மேளம் நிகழ்ச்சியில் பங்கேற்று ஜெகதீப் தன்கர் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் மற்றும் அவரது மகள் சுப்ரியா சுலே எம்.பி ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந்த நிகழ்ச்சியில் பேசிய ஜெகதீப் தன்கர், ஒரு நாடு அதன் கலாச்சார செல்வம் மற்றும் அதன் கலாச்சார நெறிமுறைகளால் வரையறுக்கப்படுகிறது. இந்த விஷயத்தில் இந்தியா தனித்துவமானது. ஏனெனில் உலகில் எந்த நாடும் நம்மை ஒப்பிட முடியாது.

நமது கலாச்சாரத்தையும் மொழிகளையும் வளர்ப்பது மூதாதையர்களின் ஆணை. அதுவே நமது வரையறுக்கப்பட்ட கடமை. இலக்கியத்தைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கை கொடுப்பதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த படையெடுப்புகளைக் குறிப்பிட்டு பேசிய ஜகதீப், ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கான சிறந்த வழி, அதை உடல் ரீதியாக முறியடிப்பது அல்ல. மாறாக அதன் கலாச்சாரத்தை தகர்த்து முறியடித்து அதன் மொழியை அழிப்பதாகும்.

அவர்கள் நம் மொழி, நம் கலாச்சாரம், நம் மத இடங்களை கைப்பற்ற மிகவும் அடக்குமுறை கொண்ட கொடூரமானவர்களாக இருந்தனர்.

காட்டுமிராண்டித்தனம் மற்றும் பழிவாங்கும் தன்மை உச்சத்தில் இருந்தது. நம்மை காயப்படுத்த, அவர்கள் நம் மத இடத்திற்கு மேலாக தங்கள் இடத்தை உருவாக்கினர். நம் மொழிகளை மட்டுப்படுத்தினர். நம் மொழி செழிக்கவில்லை என்றால், நம் வரலாறும் செழிக்காது என்று தெரிவித்தார்.



# கல்வியை அரசியலாக்க வேண்டாம்

## மும்மொழிக் கொள்கை விவகாரத்தில் தமிழக அரசுக்கு தர்மேந்திர பிரதான் கடிதம்





தமிழ்நாடு பள்ளிகளில் மத்திய அரசின் புதிய கல்விக்கொள்கையில் இடம்பெற்றுள்ள மும்மொழிக் கொள்கையை ஏற்காவிட்டால் நிதி வழங்கப்படாது என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்ததை அடுத்து பெரும் சர்ச்சை வெடித்தது. மீண்டும் இந்தி திணிப்பை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில் தமிழக அரசுக்கு தர்மேந்திர பிரதான் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், மாநில அரசு அரசியலுக்கு அப்பாற்பட்டு, நமது மாணவர்களுக்கு அறிவு, திறன்கள் மற்றும் எதிர்காலத்திற்கான வாய்ப்புகளை வழங்கும் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

2022 இல் சென்னைக்கு வந்த செய்த மாண்புமிகு பிரதமர், “தமிழ் மொழி நித்தியமானது, தமிழ் கலாச்சாரம் உலகளாவியது. தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை பிரபலப்படுத்துவதில் அரசாங்கம் முழுமையாக உறுதி பூண்டுள்ளது” என்று கூறியிருந்தார்.

ஒரு மாநிலம் புதிய கல்விக் கொள்கை (NEP 2020) ஐ குறுகிய பார்வையுடன் பார்ப்பதும், அரசியல் கதைகளைத் தக்கவைக்க அச்சுறுத்தல்களைப் பயன்படுத்துவதும் மிகவும் பொருத்தமற்றது.

இந்தக் கொள்கை ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் தாய்மொழியில் தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்கிறது. NEP 2020 மொழியியல் சுதந்திரத்தின் கொள்கையை நிலைநிறுத்துகிறது . மாணவர்கள் தங்கள் விருப்பப்படி மொழியை தொடர்ந்து கற்க உறுதி செய்கிறது. இந்தியாவின் கல்வித் துறையின் முதுகெலும்பாக இருந்து வரும் மும்மொழிக் கொள்கையை ஒரு முக்கியமான கட்டத்திற்குக் கொண்டுவருகிறோம். துரதிர்ஷ்ட வசமாக, கல்விக் கொள்கைகளின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும், அது ஒருபோதும் எழுத்து மற்றும் உணர்வுடன் செயல்படுத்தப்படவில்லை. இது பள்ளிக ளில் இந்திய மொழிகளை முறையாகக் கற்பிப்பதில் சரிவுக்கு வழிவகுத்தது.

காலப்போக்கில், இது வெளிநாட்டு மொழிகளை அதிகமாக நம்பியிருப்பதற்கு வழிவகுத்தது. தமிழ் உட்பட ஒவ்வொரு இந்திய மொழியும் கல்வியில் அதன் சரியான இடத்தைப் பெறுவதை உறுதி செய்ய NEP 2020 முயல்கிறது என்று தெரிவித்துள்ளார்.



## குடியரசு தலைவருடன் டெல்லி முதலமைச்சர் சந்திப்பு

டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தா குடியரசு தலைவர் திரவுபதி முர்முவை நேரில் சந்தித்தார். நேற்று (வியாழக்கிழமை) டெல்லி முதலமைச்சராக பதவியேற்ற நிலையில் இன்று குடியரசு தலைவர் மாளிகையில் வைத்து இந்த சந்திப்பு நடைபெற்றது.

இருவரின் சந்திப்பு குறித்து குடியரசு தலைவர் அலுவலகம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. அந்த பதிவில், “டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தா குடியரசு தலைவர் திரவுபதி முர்முவை குடியரசு தலைவர் மாளிகையில் சந்தித்தார்,” என குறிப்பிடப்பட்டு உள்ளது.

குடியரசு தலைவரைத் தொடர்ந்து குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கரையும் டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தா சந்தித்தார்.

இதையும் படியுங்கள்: ஒரு பிரதேசத்தை கைப்பற்ற அதன் ‘மொழி’யை அழிப்பதே சிறந்த வழி - ஜெகதீப் தன்கர்

டெல்லியின் நான்காவது பெண் முதலமைச்சராக பதவியேற்றுள்ள ரேகா குப்தாவுடன் ஆறு அமைச்சர்கள் பதவியேற்றுள்ளனர். இவர்களது பதவியேற்பு விழா டெல்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நடைபெற்றது. இந்த விழாவில், பிரதமர் மோடி, மத்திய பா.ஜ.க. அமைச்சர்கள் மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில முதலமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

டெல்லி முதல்வர் ரேகா குப்தா மட்டுமின்றி கோவா ஆளுநர் பி.எஸ். ஸ்ரீதரன் பிள்ளையும் குடியரசு தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்தார். இவர்களது சந்திப்பும் குடியரசு தலைவர் மாளிகையில் தான் நடைபெற்றது. இதனை குடியரசு தலைவர் மாளிகை அதன் எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளது.

## கார் விபத்தில் சிக்கிய முன்னாள் கிரிக்கெட் வீரர் சவுரவ் கங்குலி

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சவுரவ் கங்குலி. மேற்கு வங்காளத்தை சேர்ந்த அவர் நேற்று இரவு பர்த்வான் பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள காரில் சென்றார். மேலும் சில கார்கள் அவரது காருடன் அணிவகுத்து சென்றன.

ஹூக்ளி புறநகரில் தேசிய நெடுஞ்சாலையில் தாதுபூர் என்ற பகுதியில் சென்றபோது கங்குலி பயணித்த கார் விபத்தில் சிக்கியது. வேகமாக வந்த லாரி ஒன்று கங்குலியின் கார் மீது மோதியது.

இதனால் லாரி மீது மோதாமல் இருக்க கார் டிரைவர் பிரேக் போட்டார். இதில் கங்குலி காரை தொடர்ந்து வந்த 2 கார்களும் ஒன்றோடு ஒன்று மோதி கொண்டன.

இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக கங்குலி காயமின்றி உயிர் தப்பினார். அதேபோல் மற்ற யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

இந்த விபத்தில் கார்கள் மட்டுமே சேதமடைந்தது என்றும் யாருக்கும் பெரிய அளவில் காயங்கள் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



விபத்தில் சிக்கிய கங்குலி, 20 நிமிடங்களில் வேறொரு காரில் புறப்பட்டு பர்த்வான் பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் பங்கேற்று மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

# தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் போல் செயற்படக் கூடாது

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், பெப். 21

தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் போன்று செயற்படக்கூடாது. தொழிற்சங்கங்களும் உரிய வகையில் சேவையாற்றிக்கொண்டே அதை மேம்படுத்தும் வகையில் தங்களுக்கான தேவைப்பாடுகளை கோரவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம், வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் என்பனவற்றின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் தனித்தனியே சந்தித்து இன்று வெள்ளிக்கிழமை காலை கலந்துரையாடினர்.

கொடுப்பனவுகளை அதிகரித்தல், இடமாற்றங்கள் தொடர்பில் அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளாலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன்போது கொடுப்பனவு அதிகரிப்பு மீளாய்வுக்கு இணக்கமும் தெரிவிக்கப்பட்டது. இடமாற்றங்களும் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் ஆராய்ந்து முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயற்பாடுகளை ஆளுநர் பாராட்டினார். அத்துடன் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக சிறப்பாகச் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கான மெச்சுரை சான்றிதழ் வழங்கவும் ஆளுநர் இணக்கம் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தமது திருத்தப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பு தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தனர். மேலும் மூன்றிலொரு பகுதி ஆளணி வெற்றிடமாகவுள்ள நிலையிலும், தம்மிடமிருந்து நூறு சதவீத சேவை எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர். இது சாத்தியமில்லாத விடயம் எனவும் தெரிவித்தனர்.

வதிவிடப் பயிற்சிநெறி நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். ஆளணி வெற்றிடத்துக்கு சில மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதுடன் வதிவிடப் பயிற்சிநெறியை தற்போதைய காலத்துக்கு ஏற்ப மாற்றியமைக்கவும் இணக்கம் காணப்பட்டது.

கூட்டுறவில் ஒரு காலத்தில் வடக்கு மாகாணம் கொடிகட்டிப் பறந்ததாகக் குறிப்பிட்ட ஆளுநர், தற்போது அது பின்னடைவான நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

அதை உயர்த்தும் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் உண்டு. சமூகப்பொறுப்புடன் செயலாற்றவேண்டும். அதேபோல இன்னும் வினைத்திறனாகச் செயற்பட எவ்வாறான சட்டத்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதையும் பரிந்துரைக்குமாறு ஆளுநர் இதன்போது கோரினார்.

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தால் கோரப்பட்ட தளபாடவசதிகள், காகிதாதிகள் என்பனவற்றை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

மேலும் களத்தரிசிப்பு கொடுப்பனவு தொடர்பில் நிலவும் முரண்பாடுகளை சீர்செய்யவும் உறுதியளிக்கப்பட்டது.

தேசியமட்ட நிலைப்பாட்டுக்கு அமைவாக ஆசிரிய வளவாளர்கள் என நியமிப்பதை விடுத்து பதில் ஆசிரிய ஆலோசகர்கள் என்ற பதவி நிலைக்கு நியமிக்க வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இணக்கம் வெளியிட்டார்.

இந்தச் சந்திப்புக்களில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருமதி ப.ஜெயராணி, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி, வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலர் பொ.வாகீசன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலர் - நிர்வாகம் திருமதி எ.அன்ரன் யோகநாயகம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலர் - பொறியியல் சேவை எந்திரி ந.சுதாகரன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் சந்திப்புக்களில் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2025 இல் வெளியிடப்பெற்றது.